1993 அக்டோபர் 27]

34—

சென்னசமுத்திரத்தில் நூலகம்.

* 19520— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரத்தில் நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 விதி 45(7)ல் 4-பி, ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களில் கிளை நூலகம் அமைக்க வழி செய்கிறது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு எடுப்பின்படி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சென்னசமுத்திரம் 6941 மக்கள் தொகை கொண்டது. எனவே அதற்குத் தகுதி இருக்கிறது. பெரியார் மாவட்ட நூலகரிடமிருந்து முன் மொழிவு பெறப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் நிலையம் அமைப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, பொன்னான ஆட்சியிலே அனுமதியை அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து, விரைவிலே ஒரு மாத அளவிற்குள்ளாக நாங்கள் அனுமதியைப் பெற்றுத் தருவோமேயானால் குறிப்பிட்ட காலகட்டத்திலே அந்த நூல் நிலையம் அமைப்பதற்கு அரசு உடனடி நட வடிக்கை எடுத்து ஒரு இரண்டு மாத காலத்திற்குள்ளாக அந்த பகுதியிலே நூல் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யப் படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூல மாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் வாழ்ந்த இல்லத்தையே நினைவுச் சின்னமாக மாற்றி உடனடியாக அதிலே ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்ட நிறைவேற்றப்பட்ட நிபந்தனைகளுடன் முன்மொழிவு அனுப் பப்படுமானால், அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரி வித்துக்கொண்டு, கிளை நூலகம் அமைக்கப்படவேண்டும்

என்றால், அந்த ஊர்க்காரர்கள் 10 செண்ட் காலி மனை அரசுக்கு பத்திரம் செய்து தரவேண்டும். 400 சதுர அடி வாடகை இல்லாமல் கட்டிடம் தரவேண்டும். ரூபாய் 20 ஆயிரம் ரொக்கம் மற்றும் தளவாடங்கள் தரவேண்டும். ஆயிரம் உறுப்பினர்களாவது சேர்க்கப்படவேண்டும். இவற்றை பொது மக்கள் நிறைவேற்றித் தர முன் வந்தால் கிளை நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 35 திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

35—

விக்ரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம்

*10584—திரு. வீ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்ரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்ற பொன்னான ஆட்சி நடத்துகின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். விக்கிரவாண்டி பேரூராட்சி தேர்வு நிலைப் பேரூராட்சியாக இருக்கின்ற காரணத்தினாலேயும், அங்கே பேருந்து நிலையம் அமைப்பதற்கு வேண்டிய இடவசதி இருப்பதாலும், நடப்பாண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது பேருந்து நிலையத்தை அமைக்க மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS